நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*


## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

### ஈழத்து முத்துக்கள் 29

# 'நாடகச்செல்வர்' எஸ்.ரி. அரசு

**- சேகர் தம்பிராஜா -**

ஈழத்து தமிழ் மேடை நாடக வரலாறானது காலத்திற்கு காலம் பல கலைஞர்களால்



செதுக்கி எடுக்கப்பட்டு ஒரு உயர்ந்த கலை வடிவமாக வளர்ந்து வந்துள்ளது. அவ்வாறான ஒரு கலைஞராக நாற்பதுகளின் பின் புதுமையான கண்ணோட்டத்துடன் செதுக்கிய சிற்பிகளில் ஒருவராக திகழும் திரு.எஸ்.ரி.அரசு எனப்படும் "அரசையா" அவர்களின் பதிவாக இன்றைய கலைஞர் பகுதி அமைகிறது.

1948ஆம் ஆண்டு "தூக்குமேடை" என்ற நாடகம் மூலம் ஒரு நடிகனாக அறிமுகமாகி இதுவரையில் ஏறத்தாள எழுபத்தி ஐந்து நாடகங்களுக்கு மேலான நாடகங்களில் தனது நடிப்புத்திறனை வெளிப்படுத்தியுள்ள அரசையா அவர்கள் நடிகனாக மட்டுமல்லாது நெறியாளனாக, ஒப்பனைக் கலைஞனாக, ஒரு புகைப்படக் கலைஞனாக, சிற்பக் கலைஞனாக, வில்லுப்பாட்டுக் கலைஞனாக என பல்முக கலைஞனாக மிளிர்கிறார்.

1961ஆம் ஆண்டு இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது எல்லோரும் சிதறியோடிய போதும் இவர்மட்டும் தனி மனிதனாக இராணுவ வாகனத்தின் முன் நிமிர்ந்து கிடந்தது தமிழர் நெஞ்சுறுதியை இந்த மண்ணில் பதிய வைத்த மாமனிதர்.

ஒரு மாமனிதராக சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடகவியலாளர் அரசையா (எஸ். திருநாவுக்கரசு) அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாக கொண்டவர். பரம்பரை வைத்திய தொழில் படிப்போடு தனது ஆரம்பக் கல்வியை யாழ்/சென்ஜோன்ஸ் கல்லூரியில் மேற்கொண்டார். சிற்பத் துறையில் இருந்த நாட்டம் காரணமாக தென்னிந்தியா சென்று அக்கலையை பயின்றார். அக்காலகட்டம் இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தமையினால் நாலுவருட கட்டாய ராணுவ சேவையில் ஈடுபட்ட பின் நாடு திரும்பினார்.

இவர் தென்னிந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் புரட்சிகர கருத்துக்களால் கவரப்பட்டு அதன்பால் யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர் சில நண்பர்களுடன் இணைந்து ஒரு இளைஞர் கழகத்தை ஆரம்பித்து தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணா, கருணாநிதி ஆகியோர் எழுதிய புரட்சிகர நாடகங்களை யாழ்ப்பாணத்தில் நடித்து மேடையேற்றினர். "அடங்காப்பிடாரி" புகழ் வி.சி.பரமானந்தத்துடன் அரசையாவின் நாடகப் பணிகள் ஆரம்பித்தன. இவர் இயக்கிய, அரச, வரலாற்று நாடகங்களில் 'திப்புசுல்தான்', 'தமிழன் கதை', 'வீரமைந்தன்', 'வீரத்தாய்', குறிப்பிட்டு கூறக் கூடியவை.

கலையரசு சொர்ணலிங்கம் தயாரித்த 'தேரோட்டி மகனில்' அருச்சுனனாகவும், 'கோவலன்' நாடகத்தில் கோவலனாகவும் நடித்துப் புகழ் பெற்றவர். சொக்கனின் 'கவரி வீசிய காவலன்', 'ஞானக்கவிஞன்', 'தெய்வப் பாவை', 'கூப்பியகரங்கள்', பண்டிதர் சு.வேலுப் பிள்ளையின்(சு.வே.) 'வீரசிவாஜி', 'சைலாக்', 'ஒத்தொல்லோ' போன்ற நாடகங்களையும் மற்றும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'வையத்துள் தெய்வம்', 'பாஞ்சாலி சபதம்' ஆகியவற்றையும் இயக்கி தனது முத்திரையை பதித்தவர்.

எழுபதுகளில் அரசாங்கத்தால் நாடகத்துறையில் டிப்ளோமா பயிற்சிநெறி ஆரப்பிக்கப் பட்ட பொழுது அதனைக் கற்பதற்கு ஆர்வம் கொண்டு, அவ் டிப்ளோமா பயிற்சிநெறியினை முடித்தவர்களாகிய காரை.சுந்தரம்பிள்ளை, கவிஞர். வி.கந்தவனம், தார்சீசியஸ், நா.சுந்தரலிங்கம், சிவானந்தன், வள்ளிநாயகி ராமலிங்கம் போன்றவர்களை இணைத்து இவர்களுடன் குழந்தை ம.சண்முகலிங்கம்,



பிரான்சிஸ் ஜெனம் ஆகியவர்களுடன் இணைந்து யாழ் நாடக அரங்கக் கல்லூரி எனும் அமைப்பை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவராக இன்றும் அந்த மண்ணில் வாழ்ந்து வருகின்றார். இவ்வாறு நவீன நாடக இயக்கத்துடன் இணைந்து குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' நாடகத்தில் ஐயாத்துரை எனும் பாத்திரம் ஏற்று சிறப்புற நடித்தவர். இந்நாடகம், யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் தமிழக நகரங்களில் மேடையேற்றப் பட்டு பெரும் வரவேற்பை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்து நாடக வரலாற்றில் குறிப்பிட்டு கூறக் கூடிய 'பொறுத்ததுபோதும்', 'புதியதோர் வீடு', 'எந்தையும் தாயும்' போன்ற நாடகங்களை தமிழக மேடைகளில் மேடையேற்றிய போது - ஈழத்தில் நாடகத் துறை இவ்வளவு வளர்ந்துள்ளதா என தமிழக அறிஞர்கள் தமது வியப்பை வெளிக்காட்டினர்" என தனது தமிழக கலைப்பயணம் தொடர்பான பதிவுக் குறிப்பில் அரசையா தெரிவித்துள்ளார்.

எப்பொழுதுமே நெற்றியில் விபூதிப் பூச்சு, தனது உள்ளம் போலவே வெள்ளை நிற நஷனல் வேட்டி, முறுக்கிய மீசை, திடகாத்திரமான உடல், எதையும் கூர்ந்து பார்க்கும் கண்கள், கம்பீரமான குரல் என்பனவே அவரது நடிப்புத்திறனுக்கு இன்னும் அணிசெய்பவையாக அமைந்து விடுகிறது. அவருடைய பேச்சிலும் சரி சிரிப்பிலும் சரி மற்றவர்களை கவரும் ஈர்ப்பு எப்பொழுதுமே கலந்திருக்கும்.

ஒரு நாடக கலைஞனாக மட்டுமல்லாது, தொழில்ரீதியாக ஒளிப்படவியல் கலைஞராகவும் வாழ்ந்த அரசையா சிற்பம் செய்யும் ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளார். தியாகி சிவகுமாரன், பருத்தித்துறை புற்றளை கந்த முருகேசனார், சதாவதானி புலோலியூர் கதிரவேற்பிள்ளை ஆகியோரது சிலைகளை உருவாக்க தனது மருகர் ரமணி, மற்றும் அன்ரன் மாஸ்டர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியும் உள்ளார். இவரது இவ்விரு கலைத்திறமையும் நாடகத்துறையில் பாத்திரங்களை உருவாக்குவதிலும் ஒப்பனை செய்வதிலும் கைகொடுத்தன.

நடிப்புத்துறையில் மேடை நாடகத்துடன் மட்டும் நின்றுவிடாது 'குத்து விளக்கு', 'டாக்சி டிரைவர்', 'நிர்மலா' போன்ற ஈழத்து சினிமா படங்களில் நடித்ததோடு, 'கடமையின் எல்லை' எனும் படத்தில் உதவி நெறியாளராகவும் தனது கலைப்பயணத்தை பதிவு செய்துள்ளார். அத்தோடு திருப்பூங்குடி ஆறுமுகம், கலாவிநோதன் சின்னமணி கணபதிப்பிள்ளை ஆகியோருடன் இணைந்து வில்லிசை கலைஞராகவும் மிளிர்ந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளில் மேடை நாடக வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ள இவர் தனது இளமை காலங்களில் பல பாடசாலை மட்ட நாடகங்களை இயக்கியுள்ளார். அரசையா அவர்கள் இடப்பெயர்வு காலங்களில் வவுனியாவில் தங்கியிருந்து - வவுனியா வளாகம், தேசிய கல்வியியல் கல்லூரி, மற்றும் பாடசாலைகள் பலவிட்கு தனது தன்னலம் பாராத சேவையினை வழங்கியுள்ளார். அத்தோடு கான்பர எனப்படும் சிறுவர் பாடசாலையில் 'சிறுவர் நாடகம்' தொடர்பான பயிற்சிப்பட்டறையினை தொடர்ந்து ஆறு மாதங்கள் வழங்கியுள்ளார். வவுனியா திருமறைக்கலா மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் பயிற்சிப் பட்டறையினை அவரது நாடக வழி நண்பனாகிய திரு. பிரான்சிஸ் ஜெனத்துடன் இணைந்து வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

இன்று நான்கு தலைமுறைகளுக்கு நாடகப் பயிற்சியினை வழங்கி பல கலைஞர்களை உருவாக்கிய பெருமை அந்த மகோன்னத மனிதரை சேரும். அப்படிப்பட்ட ஒரு கலைஞனிடம் நானும் நாடகம் பயிற்சியினை பெற்றேன் என்பதில் பெருமையும் மன நிறைவு மடைகின்றேன்.

நல்லூர் காமாட்சி நாடக மன்றம், அரியாலை சரஸ்வதி வாசிகசாலை, வட இலங்கை நாடக மன்றம், வண்ணைக் கலைவாணர் நாடக மன்றம், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், யாழ்/ஏரியன்ஸ் கிளப், மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம், நாடக அரங்க கல்லூரி, தேசிய கலை இலக்கிய பேரவை, அரங்க செயற்பாட்டுக் குழு மற்றும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், மற்றும் இன்னும் பல இலக்கிய அமைப்புக்களுடன் இணைந்து தனது கலைப் சேவையாற்றி, இன்றும் சில அமைப்பில் தொடர்ந்து வருகிறார்.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களுடன் இணைந்து இன்றும் நாடக பயிற்சிகள் அளித்துவரும் அரசையா அவர்கள் மூன்று வருடங்களுக்கு முன்னர் யாழ் பல்கலைக் கழகத்தில் மேடையேற்றப்பட்ட 'காளிதாசன்' அவர்களின் 'அபிக் ஞான சகுந்தலம்' எனும் நாடகம் ஜுன் மாதம் 28 ஆம் திகதி யாழ் கல்வித்திணைக்கள அரங்கில் பராக்கிரம கிரியல்ல என்பவரின் நாடகக் குழுவின் அளிக்கை நிகழ்வில் மீண்டும் மேடையேறியது என்பதனைப் பகிர்ந்துகொண்ட அதேவேளை தற்பொழுது பல்கலைக்கழகத்தில் மேடை நாடகத்தின் வளர்ச்சியில் சற்று சரிவு காணப்படுவதாகவும் தனது கவலையை வெளிப்படுத்தினார். மேற்படி நிகழ்வில் "மக்கள் களறி விருது" என்னும் கௌரவமும் பெற்ற அரசையா அவர்கள் மேலும் பல அமைப்புகளின் கௌரவங்கள் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



sekar.thambyrajah@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■